www.tamilarangam.net

# கொள்கை விளக்க அமைப்புச் சட்ட அறிக்கை

## கொள்கை விளக்கம்

இலங்கையில் இனஒடுக்கு முறையானது எவ்வாறு வளர்த்தெடுக்கப்பட்டுள்ளது என்பதையும் இதை முதன்மையாகக் காட்டி ஆளும் கும்பலானது தற்பொழுது எந்தளவு துாரத்திற்கு தரகு முதலாளிய வளர்ச்சி பெற்றுள்ளது - தரகு முதலாளியத்தில் சிங்கள தரகு முதலாளிகள் மட்டும் தான் இருக்கிறார்களா? என்பதையும் பின்னர் ஆராய்வோம். ஆனால் ஒன்று மட்டும் உண்மை, இன்று இலங்கையில் தரகு முதலாளிய ஆட்சியே நிலைகொண்டுள்ளது.

இதற்கான அடித்தளம் அரைநிலப்பிரபுத்துவ அரைக்காலனிய சமுதாய அமைப்புத்தான். 'தேசிய எழுச்சி' என்ற அலையில் (சிங்களவர்-தமிழர்) நிலை பெற்ற ஆட்சியில் ஒட்டிக் கொண்டு வளர்ந்த தேசிய முதலாளிகள் இன்று தரகு முதலாளிகளாக மாறி விட்டார்கள் அல்லது மாறி வருகிறார்கள். இப்படியான ஒரு நிலையில் இன ஒடுக்குமுறையை எதிர்த்துப் போராடி பாட்டாளி வர்க்கத்தின் கையில் ஆட்சி அதிகாரத்தை கொண்டு வருவதற்கு நாம் அடிப்படையிலிருந்து என்ன என்ன வழிவகைகளை கையாளலாம் எனப்பார்ப்போம்.

எமது போராட்டம் மூன்றுவகையான வடிவங்களில் அமையப்பெறும்.

- ❖ இனஒடுக்குமுறையை எதிர்த்துப் போராட்டம்
- ❖ அரைக்காலனிய அரைநிலப்பிரபுத்துவ தரகு முதலாளிகளை எதிர்த்துப் போராட்டம்
- ❖ அந்நிய ஏகாதிபத்தியங்களை எதிர்த்த போராட்டம்.

இம்மூன்றும் நடைமுறையிலுள்ள முக்கிய முரண்பாடுகள் இதில் இனஒடுக்குமறையானது தற்பொழுது முதன்மை முரண்பாடாக உள்ளது. இதை எதிர்த்துப் போராட்டத்தை முன் எடுக்கும் போது ஏனைய இரண்டு

முரண்பாடுகளையும் நாம் எதிர்த்துப் போராடவேண்டிவரும். அவ்விரண்டையும் எதிர்த்துப் போராடும்போது அவையே பிரதான முரண்பாடாக அமையும். இனி அடிப்படையில் நாம் ஒன்றுபடுவதற்குரிய சில கருத்துக்களைப் பார்ப்போம்.

1 ஆட்சியதிகாரத்திலுள்ள இலங்கையரசானது அமைப்பு ரீதியில் இராணுவம், காவல்துறை போன்ற படை அமைப்புகளைக் கொண்டுள்ளது. ஏனவே நாமும் அமைப்புரீதியிலேயே அணிதிரண்டு படைகளைக்கூட்டி அதை எதிர்த்து முறியடிக்க முடியும்.

2 தமது ஆட்சியை வன்முறைமூலம் ஆயதபாணியாக அதிகாரம் செலுத்தியே கட்டிக்காப்பாற்றுகின்றனர். எனவே நாமும் ஆயதமேந்திய மக்கள் யுத்தம் மூலம் அதை முறியடிக்க முடியும்.

3 தமது கருத்துக்களை தத்துவங்களை வானொலி, தொலைக்காட்சி, செய்திப் பத்திரிகை, கலை இலக்கியம் என்ற பரந்த அமைப்புக்கள் ஊடாக மக்களை பயன்படுத்திக் கொள்கிறார்கள். இவ்வாறான பாரிய தொடர்பு சாதனம் எமது கையில் இல்லை. ஒரு துண்டுப் பிரசுரமோ, சிறு பத்திரிகையோ சிலர் கைக்குப் போய் சேர்ந்து ஒரு சிலர் அமைப்பில் சேர்ந்தவுடன் ஆகா இதுபோதும் என்று செயலில் இறங்காமல் பரந்த அளவில் நாடு தழுவிய பிரச்சாரம் (நேரடிக் கலந்துரையாடல், நாட்டுப்பாடல், கலை நிகழ்ச்சிகள், பத்திரிக்கை) செய்து அணிதிரட்டி போராடவைத்து படைகளைக்கட்டிய பின்பே செயலில் இறங்கலாம். அதுவரை ஆயதம் பயிற்சி போன்ற எமது பழைய நடவடிக்கைகளுக்கு முதன்மை இடம் கொடுக்காமல் பிரச்சாரம் படைகட்டுதல் என்பவற்றிற்கே முதன்மை இடம் கொடுத்தல் வேண்டும். ஆனால் தற்பாதுகாப்பு நடவடிக்கை அவசியம் என்று கருதும் வேலையில் அது செய்யப்பட்ட வேண்டிய ஒன்று தான். எதிரியைத் தேடி நாம் சென்று தாக்குதலில் ஈடுபடவேண்டிய அவசியமில்லை.

4 அரசாங்கத்தை சாடுபவரும், அநியாயங்களை எடுத்துக் கூறுபவரும் பலர் இருக்கலாம். தேர்தல் முறையை நிராகரித்து யுத்தப் பாதையை தேர்ந்தெடுத்து அதற்குரிய தயார்படுத்தலிலேயே நமத நோக்கம் முழுமையாக இருக்கவேண்டும். இதுதவிர எந்த வழியைத் தேர்ந்தெடுத்தாலும் பலன் அளியாது. தேர்தல் பாதையானது எவ்வளவு தூரத்திற்கு நேர்மையான போராளியையும் சரணாகதியடையச் செய்யும அல்லது தியாகி என்ற பட்டத்துடன் அழியச்செய்யும். இது மேலும் தேர்தல் பாதையில் செல்லும் த.வி.கூ. தலைமைக்கு முண்டு சக்தியாக அமையும். (தியாகி சிவகுமாரன் 1962 சத்தியாக்கிரகப் போராட்டடம் என்பவை இன்றும் பொது மேடைகளில் பேசப்பட்டு கண்ணீர் சிந்தவைப்பவை) இது எவ்வகையிலும் எதிரிவர்க்கத்தை வென்றெடுக்க வழிவகை செய்யாது.

5 தற்போதைய அளும் கும்பல் தரகு முதலாளிகள், இதற்கு துணை போகிறவர்கள் யார் யாரோ அவர்கள் எமது எதிரிகள்: அந்நிய ஏகாதிபத்தியங்கள் எல்லாமே எமது எதிரிகள்: அமெரிக்கப் பெரு மேலாதிக்கம், சமூகமேலாதிக்கம் அதற்கு துணையாக வரும் எந்த ஒரு நாடோ, சமூக சேவாசங்கமோ எதிரிகளேயாவர். சமூக மேலாதிக்கம் இன்றைய கட்டத்தில் நேரடியாக ஈடுபடாவிட்டாலும் இந்திய அரசு பெருமுதலாளியத்திட்டாக இலங்கைக்குள் ஊடுருவும் அபாயம் உண்டு. இலங்கையில் அமெரிக்க மேலாதிக்கத்தின் இராணுவ தளம் தொழில் மூலதனப் போட்டியானது சர்வதேச ஏகாதிபத்தியப் போட்டியாக விரிவாகும் போது சமூக மேலாதிக்கத்தை எவ்வகையிலும் போட்டியாக ஈடுபடச்செய்யும். இது எமது மக்களின் விடுதலையைப் பேரம் பேசும் நிலைமைக்குத் தள்ளலாம். முதன்மையான எதிரி அமெரிக்கா தான். ஆனால் துணை எதிரியாக சமூக மேலாதிக்கம் இன்று உள்ளது. துணையானது ஒரு காலத்தில் முதன்மையாக மாறும். எனவே எமது மக்களின் விடுதலையானது எமது மக்களின் சொந்தப் பலத்திலேயே தீர்மானிக்கப்படக்கூடியதாக எமது அமைப்பானது ஏகாதிபத்தியங்களுக்கு (அது எந்த வடிவம் கொண்டதாயினும்) வால் பிடிக்கும் போக்காக அல்லது அத்தன்மை சிறிதளவேனும் கொண்டதாக அமையக்கூடாது.

6 எமது மக்களின் விடுதலை என்பது நிலப்பரப்பையோ அல்லது மக்கள் தொகையையோ பிரித்து பங்கு போடுவதல்ல. சுரண்டும் வர்க்கம் மட்டுமே சுரண்டலை தமக்கென மட்டும் ஆக்கிக்கொள்வதற்காக நிலத்தையும் மக்கள் தொகையையும் பங்கு போட்டுக் கொள்ளும். அத்துடன் அதை விரிவுபடுத்தவும் செய்யும். எனவே சுரண்டும் வர்க்கத்தினர் நிலப்பரப்பையும் மக்களையும் தமதே தமதே என முழக்கமிட்டுக் கொண்டு சுரண்டலை வளமாக வசதியாக செய்ய முற்படுவர். இவ்வடிப்படையில் தான் இலங்கை அரசும் நாட்டை துண்டாட விடமாட்டோம் விடமாட்டோம் என முழக்கமிடுகிறது. எனவே விடுதலை வேண்டும் மக்களுக்காக பாடுபடும் அமைப்பானது இலங்கை அரசியந்திரத்தை முற்றாக உடைத்தெறிந்தே விடுதலையைப் பெறமுடியும். அரசியந்திரத்தை நாடுதழுவிய ஒரு செயல்பாடாகவே அமையப் பெறல் வேண்டும். அல்லாவிடின் தமிழ் பகுதிகளில் போராட்டம் கூர்மையடைய, அரசானது தமிழ் பகுதிகளிலுள்ள தமது ஒத்த வர்க்கத்திடம் ஆட்சி அதிகாரத்தைப் பங்கிட்டுக் கொள்ளும். நீயும் சுரண்டு, நானும் சுரண்டுகிறேன். சுரண்டலை எதிர்ப்பவர்களை ஒன்றாக சேர்ந்து முறியடிப்போம் என்ற அடிப்படை ஓப்பந்தத்தின் பேரில் ஆட்சியதிகாரத்தை தமக்குள் பங்கிட்டுக் கொள்ளும்.

இதன் அடிப்படையில் தெற்கில் உள்ள முற்போக்கு சக்திகளுடன் எமக்கு ஐக்கியம் வேண்டும். ஐக்கியம் என்பது கலந்து கரைதல் அல்ல.

1. எதிரி எமக்கும் உங்களுக்கும் ஒன்று
2. அந்நிய ஏகாதிபத்தியங்கள் எல்லாம் எதிரி
3. இந்திய விரிவாதிக்கம் எமக்கும் எதிரானது.

இன ஒடுக்கு முறையை எதிர்த்த போராட்டம் இனவெறியல்ல. நியாயமான எதிர்க்கப்படவேண்டிய ஒன்றே என்று புரிய வைத்து ஒத்த போராட்டங்களை ஒன்றாகச் செய்தல். இன ஒடுக்கு முறையை சாக்காக வைத்து அந்நிய மேலாதிக்கங்கள் முன்வரலாம். குறிப்பாக எமது சிக்கலில் முன்வருவதற்கு சமூக மேலாதிக்கமானது இந்நிய அரசு பெருமுதலாளியம் ஊடாக முன்வரலாம். இதை நாம் வண்மையாக எதிர்ப்போம் என்பது தெற்கிலுள்ள முற்போக்கு சக்திகளுக்கு புரிய வைத்து ஐக்கியத்தைப் பேணுதல் வேண்டும்.

இன விடுதலைப் போராட்டம் இப்பொழுது முதன்மை முரண்பாடாக உள்ளது. இது தரகு முதலாளிகளுக்கெதிரான, அந்நிய ஏகாதிபத்தியங்களுக்கெதிரான போராட்டமாக போராட்டம் கூர்மையடையும் பொழுது உருவாகும்.

ஆயினும், இன விடுதலை என்ற அடிப்படையில் பாட்டாளி வர்க்க ஜனநாயகத்தின் கோட்பாட்டின்படி பல்வேறு நாடுகள் அமைதியாகவும் சுகந்திரமாகவும் சேர்ந்து வாழ்வதற்கோ அல்லது பிரிந்து செல்வதற்கோ (இது பிரிந்து செல்லும் நாடுகளுக்கு மேலும் வசதி எனில்) உரிமை உண்டு. எந்த ஒரு நாட்டிற்கோ மொழிக்கோ சிறப்புச்சலுகை எதுவும் கிடையாது. ஒரு தேசிய சிறுபான்மையினரைப் பொறுத்தவரை மிகச்சிறியளவில் கூட ஒடுக்கு முறையோ அநீதியோ இருக்கக்கூடாது. எமது ஐக்கியத்தை தெற்கிலுள்ள முற்போக்கு சக்திகளுடன் உறுதிப்படுத்தல் வேண்டும்.

7 ‘தனிநாடு ’ ‘தனிநாடு ’என்ற முழக்கமானது த.வி.கூ பாணியில் எவ்வாறாயினும் தனிநாடு சிங்கப்பூர் பாணியில் தமிழ் ஈழம் போன்ற முழக்கமாக இருக்காமல், இன ஒடுக்கு முறைப் பாரம்பரிய நிலம் பறிபோதல், குடியுரிமை, வாக்குரிமை பறிக்கப்படுதல், பண்டமாற்று செய்வதுபோல் இந்தியாவிற்கு மலையகத் தமிழர்களை விரட்டியடித்தல் என்பனவற்றிற்கு எதிராக மக்கள் போராட்டமாகவும், அந்நிய ஏகாதிபத்திய பிடியிலிருந்து நாடு பூராவும் விடுதலை என்ற வகையிலும் அமைதல் வேண்டும். ‘தமிழினத் தலைவர்கள்’ என்று சொல்லப்பட்டவர்கள் உண்மையில் தமிழ் மக்களுக்கு தலைவர்கள் இல்லை என்றும், இங்கிலாந்து அமெரிக்க மேலாதிக்கங்களுக்கு வக்காளத்து வாங்கும் அப்புக்காத்துமார்கள் என்றும், இன்று அவர்கள் தமிழ்ப் பகுதியிலுள்ள தரகு முதலாளிகளின் பிரதிநிதிகள் என்றும், பரந்துபட்ட மக்களின் விடுதலைக்கு முதன்மையான எதிரிகள் (சுகந்திரம், தாய்நாடு, மொழி ஆகியவற்றின் நலன்களை முதலாளி வர்க்கம் புரட்சிகர பாட்டாளி வர்க்கத்தை எதிர்கொண்ட பொழுது எண்ணற்றமுறை விற்றுள்ளதை பாட்டாளி வர்க்கத்தினர்

ஆகிய நாம் பலதடவை பார்த்துள்ளோம் - லெனின்) என்றும் தெற்கிலுள்ள முற்போக்கு சக்திகளுக்கு புரிய வைத்தல் வேண்டும்.

8 இவ்வளவு காலமாக தமிழின மீட்புக்கென புறப்பட்டவர்கள் மலையகப் பாட்டாளி மக்களை மாற்றாந் தாய் மனப்பான்மையுடனேயே அனுகினார்கள். இதற்கு அவர்களின் வர்க்கப் பின்னணியும், தலைமையும் தான் காரணம். எனவே பாட்டாளி வர்க்கத்தின் தலைமையிலேயே இன ஓடுக்கு முறையை எதிர்த்து உண்மையான போராட்டத்தை நடத்தி பாட்டாளி வர்க்க ஆட்சியதிகாரத்தை நிலைநாட்ட முடியும். முதலாளி வாக்கத் தலைமையிலேயோ நடத்தப்படும் இனவிடுதலைப் போராட்டமானது எந்த வடிவத்தையுடையதாயினும் (சிலவேளை ஆயதமேந்திப் போராடினாலும்) பேரம் பேசுவதில் அல்லது அதிகாரப் பங்கீட்டில் (ஏற்கனவே உள்ளது) கொண்டு செல்லும். மக்களுக்கு விடுதலை கிட்டாது.

9 அரை நிலப்பிரபுத்துவ அரைக்காலனி நாடாக உள்ள எமது நாட்டில் இனவிடுதலைப் போராட்டமானது ஒரு புதிய வடிவத்தைப் பெறுகிறது. அரைக்காலனிய, அரை நிலப்பிரபுத்துவ தரகு முதலாளியத்திற்கு எதிராக அனைத்துச் சக்திகளையும் அணிதிரட்டி, ஒரு ஜனநாயக முன்னணியை அமைத்து போரட்டத்தை முன் எடுக்க வேண்டியுள்ளது. இத்தகைய ஜனநாயக சக்திகளுக்கு பாட்டாளி வர்க்கமே தலைமை ஏற்கும். நேரடியாக சோஷலிச புரட்சி செய்யவேண்டிய சமுதாய அமைப்பாக எமது நாடு இல்லை. எனவே ஒரு புதிய ஜனநாயகப் புரட்சிப் பாதையையே நாம் தீர்மானிக்க வேண்டும். அரைக்காலனிய ஆதிக்கம், அந்நிய ஏகாதிபத்தியங்களின் நுகத்தடி நிலைமை இவற்றின் கொடுமையின் மறைமுக வெளிப்பாடாகத் தெரியும் இனஒடுக்குமுறையானது, போராட்ட உணர்வைக் கூர்மைப்படுத்தி வளர்த்தெடுக்கப்படும் பொழுது, தேசிய விடுதலைப் போராட்டமானது சாராம்சத்தில் வர்க்கப் போராட்டத் தன்மையையே பெறுகின்றது.

எனவே

1 யுத்தப்பாதை.
2 அதற்குரிய படை கட்டுதல்.
3 படைகட்டுவதற்கு இடைக்கால போராட்ட வழிவகைகள்.
4 அதற்கொரு அமைப்பு.
5 அமைப்பு உருவாக பிரச்சார வேலைகள்.
6 பிரச்சாரம் என வரும்பொழுது எமது கொள்கை.
7 கொள்கையில் முகாமையாக எதிரிகள் யார்?
8 தனிநாடு என்றால் அதிகாரப் பங்கீடா?
9 அதிகாரப் பங்கீடு என்றால் சும்மா தமிழ் ஈழம் கிடைக்குமா?
10 இல்லையெனில் அரசியந்திரத்தை முறியடித்தல் வேண்டும்.
11 அப்படியெனில் வடக்கும் கிழக்கும் மட்டும் முடியுமா?
12 முடியாவிடின் தெற்கிலும் நட்புச் சக்தி தேவை.

13 ஆயின் நாம் யார் என்பதை விளக்க வேண்டும்.
14 ஏமது எதிரிகள் உங்கள் என புரியவைத்தல்.
15 இருப்பிலுள்ள இனஒடுக்குமுறையை தெற்கிலுள்ளவர்கள் தவறு என உணரவைப்பதுடன் அவர்களை அதற்கெதிராகவும் போராட வைத்தல்.
16 அதன் பேரில் ஐக்கியப்பட்டு அனைத்து ஜனநாயக சக்திகளையும் ஒன்று சேர்த்து அந்நிய மேலாதிக்கம், தரகு முதலாளியம் என்பவற்றிற்கு எதிரான ஐக்கிய முன்னணியை உருவாக்கி ஒரு புதிய ஜனநாயகப் புரட்சியை நிலைநிறுத்தல் வேண்டும்.

# அமைப்புச் சட்டம்

பிரிவு 1 பெயர்: தமிழ் மக்கள் பாதுகாப்புப் பேரவை

பிரிவு 2 குறிக்கோள்: இனஒடுக்குமுறை, அரைநிலப் பிரபுத்துவ தரகு முதலாளியத்தை, ஏகாதபத்திய ஊடுருவலை எதிர்த்து புதிய ஜனநாயகப் புரட்சியை மேற்கொள்வோம். மாக்சிச லெனிசச மாவோசிய சித்தாந்தங்களின் வழிகாட்டலின் கீழ் கம்யூனிய சமுதாயத்தை சென்றடைவோம்.

பிரிவு 3 கொடி: அகலத்தைப் போல் ஒன்றரை மடங்கு நீளமும் முழுவதும் சிவப்பு நிறம், மையத்தில் வெண்ணிறத்தில் சின்னம் பொறிக்கப்பட்டிருக்கும்.

பிரிவு 4 சின்னம்: வளர்ச்சியைக் குறிக்கும் இரு தளிர்களின் மையத்தில் அரிவாள் சம்மட்டி பின்னணியில் இரு துப்பாக்கிகள். மேல் முனையில் நட்சத்திரம்.

பிரிவு 5
கட்டவிழ்த்து விடப்பட்ட அரச பயங்கரவாதம் தனிமனித பயங்கரவாதம் போன்றவற்றின் வெறியாட்டங்கட்கு கட்சியானது

பலியாகாமல் இருக்கும் பொருட்டும் மற்றும் கட்சியின் பாதுகாப்பு வளர்ச்சி கருதியும் சேரும் உறுப்பினர்கள் மூன்று படிநிலைகளில் வைத்து வளர்த்தெடுக்கப்படுகிறார்கள். அவையாவன:

1 பரீட்சார்த்த உறுப்பினர்
2 தேர்வு உறுப்பினர்
3 பொதுக்குழு உறுப்பினர்

பிரிவு 6 உறுதிமொழி

கட்சியில் சேரும் ஒவ்வொரு உறுப்பினரும் இவ்வுறுதி மொழியை வாசித்து மனப்பூர்வமாக கையெழுத்திடல் வேண்டும். கட்சியின் நோக்கங்களையும் குறிக்கோள்களையும் ஏற்றுக் கொள்கிறேன், கட்சியின் அமைப்புச் சட்டத்தின்படி நடப்பதற்கும் கட்சியின் முடிவுளை விசுவாசமாக நிறைவேற்றவும் நான் ஒப்புக் கொள்கிறோன் என உறுதிமொழி எடுக்க வேண்டும்.

பிரிவு 7 உறுப்பினர் தகுதி:

1.பதினாறு அல்லது அதற்கு மேற்பட்ட வயதுடையவராக இருத்தல் வேண்டும்.

2.வேறு அரசியல் சார்பான இயக்கங்கள், கட்சிகள், ஸ்தாபனங்கள் என்பவற்றின் உறுப்பினராக இருத்தல் கூடாது.

3.கட்சியின் கொள்கைக்கு மாறான எந்த ஒரு முற்போக்கு சமூக ஸ்தாபனங்களினதும் உறுப்பினராக இருத்தல் கூடாது.

4.கட்சியின் அமைப்புச் சட்டம், வேலைத் திட்டம் என்பவற்றைப் பூரண விசுவாசத்துடன் ஏற்றுக் கொள்ள வேண்டும்.

5.கட்சியின் குறிக்கோளை முழுயளவில் புரிந்து கொள்ளவேண்டும்.

6.கட்சியின் விருப்பத்தின் பேரில் அதன் ஸ்தாபனங்கள் ஒன்றில் வேலை செய்வதற்கு ஒப்புக்கொள்ள வேண்டும்.

7.கட்சி எடுக்கும் முடிவுகளையும் அதனை நிறைவேற்றுவதற்கும் ஒப்புக் கொள்ளல் வேண்டும்.

பிரிவு 8 கடமை, உரிமை

கடமை:

1.உறுப்பினர் தன்னைப் பற்றிய முழு விபரங்களையும் தெரிவிக்க வேண்டும்.

2.வேறு (மாற்று) அரசியல் கட்சி அல்லது இயக்கங்களில் இருந்தால் அது பற்றிய முழு விபரங்களையும் கூறவேண்டும்.

3.மார்க்ஸிசம் பற்றிய தங்கள் அறிவின் வரம்பை உயர்த்திக் கொள்ள பாடுபட வேண்டும்.

4.கட்சியின் அமைப்புச் சட்டம், கட்டுப்பாடு ஆகியவற்றை தவறாது கடைப்பிடிக்கப்பட வேண்டும்.

5.கட்சி வேலைகளில் முறையாக பங்கெடுத்துக் கொள்ள வேண்டும். கட்சி முடிவுகள் ஆகியவற்றை விசுவாசமாக நிறைவேற்ற வேண்டும்.

6.மக்களுடன் உள்ள உறவை பலப்படுத்துவதுடன் மக்களது அபிப்பிராயங்களையும் கோரிக்கைகளையும் கட்சிக்கு அறிவிக்க வேண்டும்.

7.உறுப்பினர் ஒவ்வொருவரும் தங்களிடையே தோழமை மிக்க உறவுகளை வளர்க்க வேண்டும். கட்சிச் சகதோழர் தவறிழைக்கும் பட்சத்தில் அதை உடனடியாக தெரியப்படுத்தல் வேண்டும்.

8.கட்சியின் ஒற்றமையையும் முக்கியத்துவத்தையும் பாதுகாத்து விரோதிகளுக்கு எதிரான விழிப்புணர்ச்சியுடன் செயலாற்றி அவர்களின் தாக்குதல்களிலிருந்து கட்சியைப் பாதுகாத்து கட்சி இலட்சியத்தை நிறைவேற்றல் வேண்டும்.

9.கட்சி இரகசியங்களைப் பேணி பாதுகாக்க வேண்டும்.

உரிமை:

1.கட்சி நிர்வாக அமைப்புக்களைத் தேர்ந்தெடுப்பது, தாமும் அவற்றிற்குத் தேர்ந்தெடுக்கப்படுவது.

2.கட்சி எடுக்கும் அமைப்புக்களை உருவாக்குவதில் தன் பங்கை செலுத்தும் முறையில் விவாதத்தில் பங்கெடுத்துக் கொள்வதுடன் ஆலோசனைகளை முன்வைத்தல்.

3.கட்சியின் ஆரோக்கியம் மற்றம் வளர்ச்சிக்குத் துணை செய்யும் பொருட்டு விவாதம், விமரிசனம் என்பவற்றை முழுமையாக அனுபவித்தல்.

4.ஒழுங்கு நடவடிக்கை எடுப்பது குறித்து விவாதிக்கையில் தான் நேரில் சொல்வது கேட்கப்படல் வேண்டும் என்று கோரும் உரிமை உண்டு.

www.tamilarangam.net

5.எந்தவொரு அறிக்கைகளையோ வேண்டும் கொள்கைகளையோ அல்லது புகாரையோ சமர்ப்பிக்க சகல உறுப்பினருக்கும் உரிமை உண்டு.

பிரிவு 9 உறுப்பினர் தகுதித் தணிக்கை

1.உறுப்பினர் அமைப்பின் எந்தப் பிரிவின் கீழ் இருக்கின்றோமோ, அந்தப் பிரிவினால் வருடந்தோறும் உறுப்பினர் தகுதி பரிசீலிக்கப்படடிருத்தல் வேண்டும். கட்சியின் நடவடிக்கையில் தொடர்ச்சியான ஒரு காலத்திற்கு அத்துடன் அதற்குச் சரியான காரணமின்றியும் பங்கெடுக்கத் தவறுகின்ற அல்லது சந்தாப் பணத்தை தகுந்த காரணமின்றி கட்டத் தவறுகின்ற எந்தவொரு உறுப்பினரும் கட்சியிலிருந்த விட்டுவிடப்படல் வேண்டும்.

2.கட்சி உறுப்பினர் குறித்து தணிக்கை செய்யும் பிரிவு அதன் முடிவுகளை அடுத்த மேற்பிரிவிற்கும் அறிவிக்கவேண்டும்.

பிரிவு 5 இன் விரிவு

பரீட்சாத்த உறுப்பினர்(புதிய உறுப்பினர்): இவர் பிரிவு 7-ல் கூறப்பட்ட தகுதிகளைக் கொண்டிருத்தல் வேண்டும். இவர் மூன்று மாதம் பரீட்சாத்த காலநிலையில் வைக்கப்படுவார். இவரும் இவருடன் சேர்ந்த சக பரீட்சாத்த உறுப்பினர்களும் இவர்களைச் சேர்த்து தேர்வு உறுப்பினருடன் சேர்ந்து ஒரு குழுவாக இயங்குவார். அத்துடன் அத்தேர்வு உறுப்பினர் ஊடாக அடுத்துள்ள மேற்பிரிவுகளுடன் தொடர்ப கொண்டு தங்களுக்குரிய வேலைத் திட்டங்களைப் பெற்றுக் கொள்வதுடன் அதுபற்றிய தங்கள் கருத்துக்களையும் தெரிவித்து தங்களிற்கும் அமைப்பிற்குமிடையில் ஒரு நெருங்கிய உறவை ஏற்படுத்திக் கொள்வார். மூன்று மாதத்தின் பின் சம்பந்தப்பட்ட பரீட்சாத்த உறுப்பினரின் சகல நடவடிக்கைகளும் திருப்தியளிக்கும் பட்சத்தில் அவர் ஒரு தேர்வு உறுப்பினராக ஆக்கப்படுவார். ஒரு பரீட்சாத்த உறுப்பினர் தேர்வு உறுப்பினராகும் போது தனக்குரிய சகல நடவடிக்கைகளையும் கடமைகளையும் உரிமைகளையும் தெரிந்திருத்தல் வேண்டும். சம்பந்தப்பட்ட பரீட்சாத்த உறுப்பினரின் நடவடிக்கைகள் திருப்தியளிக்க தவறும்பட்சத்தில் அவர் தொடர்ந்தும் பரீட்சாத்த நிலையில் வைக்கப்படல் வேண்டும்.

தேர்வு உறுப்பினர்: பரீட்சாத்த நிலையிலிருந்து வந்திருத்தல் வேண்டும். இவர் ஒன்பது மாத காலம் தேர்வு உறுப்பினர் நிலையில் இருத்தல் வேண்டும். இக்கால இடைவெளியில் இயக்கத்தின் வேலைத் திட்டத்தை முழுமையாக நிறைவேற்றல் வேண்டும். இவர் தான் சேர்க்கும் புதிய உறுப்பினர்களுக்காக பொறுப்பேற்பதுடன் அவர்கள் பற்றிய சகல விபரங்களையும் சம்பந்தப்பட்ட மேல் பிரிவுகளுக்கு தெரியப்படுத்தல் வேண்டும். அத்துடன் அவர்களுக்கான வேலைத் திட்டத்தையும் பெற்றுக்

கொடுத்தல் வேண்டும். புது உறுப்பினர்களுடன் எந்தவித வர்க்க வித்தியாசமுமின்றி பழக வேண்டும். இவருடைய கால முடிவில் இவருடைய நடவடிக்கைகள் பற்றி எந்தவித குறைகளும் காணப்படாவிட்டால் இவர் பொதுக்குழு உறுப்பினர் ஆக்கப்படுவார். குறைகள் காணப்படும் பட்சத்தில் இவர் தொடர்ந்தும் தேர்வு உறுப்பினராக இருத்தல் வேண்டும். பொதுக்குழு உறுப்பினர் தேர்வு உறுப்பினர் நிலையிலிருந்து வந்திருத்தல் வேண்டும்.

பிரிவு 10 இராஜினாமா

1.இராஜினாமா செய்ய விரும்பும் உறுப்பினர் தம் முடிவையும் அதற்கான காரணத்தையும் எழுத்தில் தான் சார்ந்திருக்கும் பிரிவுக்கு தெரியப்படுத்தல் வேண்டும். இராஜினாமா அரசியல் காரணமாக இருந்தால் அவரின் இராஜினாமா ஏற்க மறுத்து விட்டு இயக்கத்திலிருந்து வெளியேற்றலாம்.

2.ஒரு உறுப்பினரின் இராஜினாமாவை ஏற்று அவரை உறுப்பினர் பொறுப்பிலிருந்து நீக்கும் முடிவை மேற்கொள்ளும் பிரிவு அது சம்பந்தமான சகல அறிக்கைகளையும் அடுத்த மேற்பிரிவிற்கு அனுப்புதல் வேண்டும்.

4. உறுப்பினரின் மனமாற்றத்தின் பொருட்டும், அவரின் இராஜினாமா சம்பந்தமாக பரீசீலினை செய்யும் பொருட்டும் இயக்கமானது தனது முடிவை அறிவிக்க தேவையான அளவு அவகாசம் எடுத்துக் கொள்ளலாம்.

பிரிவு 11 உறுப்பினர் சந்தா, நன்கொடை.

1.கட்சியின் நிதியில் தங்கியிருக்கின்ற உறுப்பினர் தவிர்ந்த சகல உறுப்பினரும் மாதம் 5 ரூபா வீதம் வருடம் ஒன்றிற்கு 60 ரூபா சந்தாவாக கட்டல் வேண்டும்.

2.உறுப்பினர் ஒருவர் வசதியிருப்பின் தன் வசதிக்கேற்ப எவ்வளவு தொகையையும் நன்கொடையாகக் கொடுக்கலாம். உறுப்பினரல்லாதோரும் நன்கொடையாக பணம் கொடுக்கலாம். ஆனால் அப்பணம் ஒரு உறுப்பினர் ஊடாக கொடுக்கப்படல் வேண்டும்.

3.சந்தா பணமானாலும் நன்கொடைப் பணமானாலும் தான் சார்ந்திருக்கும் பிரிவிலிருந்து கொடுக்கப்பட்டு அதற்குரிய இரசீத்தினையும் பெற்றுக் கொள்ளல் வேண்டும்.

4.சகல பிரிவுகளிலும் சேர்க்கப்படும் பணம் மேற்பிரிவுகளின் ஊடாக நிதிக்குப் பொறுப்பான குழுவிடம் சேர்க்கப்படல் வேண்டும்.

பிரிவு 12 ஜனநாயக மத்தியத்துவம்

கட்சி அமைப்புக்களானது ஜனநாயக மத்தியத்துவத்தின் கோட்பாடுகளை அடிப்படையாகக் கொண்டிருக்கிறது. (உட்கட்சி ஜனநாயகத்தை அடிப்படையாகக் கொண்ட மத்தியத்துவப்படுத்தப்பட்ட தலைமையும் மத்தியப்படுத்தப்பட்ட தலைமையின் வழிகாட்டலின் கீழ் ஜனநாயகமுமே ஜனநாயக மத்தியத்துவம் என்பதன் பொருள்.)

1.கீழ் மட்டத்திலிருந்து மேல் மட்டம் வரை சகல உறுப்புக்களும் தேர்ந்தெடுக்கப்படும்.

2.பெருமபான்மையின் முடிவுகளை சிறுபான்மை நிறைவேற்றும். மேல்மட்டத்தின் முடிவுகளை கிழ்மட்டம் நிறைவேற்றும்.

3.கட்சியின் எல்லாப் பிரிவும் முறையான அதனதன் வேலையைப் பற்றி உடனடியாகத் தனக்குக் கீழ் உள்ள ஸ்தாபனத்துக்கு அறிக்கை செய்யவேண்டும். அம்மாதிரியாக எல்லா கீழ் கமிட்டிகளும் அதன் அடுத்துள்ள மேற்பிரிவுகளுக்கு அறிக்கைகள் அனுப்பவேண்டும்.

4.கீழ் மட்டத்திலிருந்து வரும் அபிப்பிராயங்கள் விமர்சனங்கள் என்பவற்றிற்கு மேல்மட்டம் கவனம் செலுத்த வேண்டும். அத்துடன் ஊக்குவிக்க வேண்டும்.

பிரிவு 13 பொதுக்குழு

1.நாடு முழுவதுமான கட்சியின் மிக உயர்ந்த அமைப்பு பொதுக் குழயாகும்.

2.சாதாரணமாக ஒரு வருடத்துக்கு ஒரு முறையாக பொதுக்குழு மத்திய கமிட்டியினால் கூட்டப்படல் வேண்டும்.

3.மத்திய கமிட்டி தன் சொந்த உசிதத்தின் பேரிலோ அல்லது பொதுக்குழு உறுப்பினர்களின் மொத்த உறுப்பினர்களில் மூன்றில் ஒரு பங்கிற்கு குறையாத உறுப்பினர்கள் கோரினாலோ பொதுக்குழு மத்திய கமிட்டியினால் கூட்டப்படும்.

4.பொதுக்குழு கூட்டப்படும் காலம், இடம் என்பவற்றை மத்திய கமிட்டியே முடிவு செய்யும்.

5.முறையான தெரிவின் ஊடாக தெரிவு செய்யப்பட்டு வரும் உறுப்பினர்களே பொதுக்குழவின் அங்கம் வகிக்க தகுதியுடையவர்.

பொதுக்குழுவின் பொறுப்புக்கள்

1.மத்திய கமிட்டியின் அரசியல் ஸ்தாபன அறிக்கையை விவாதித்து அதனடிப்படையில் நடவடிக்கை எடுப்பது.

2.கட்சியின் வேலைத் திட்டத்தையும் அமைப்புச் சட்டத்தையும் மாற்றுவது: திருத்துவது.

3.அன்றுள்ள உடனடி நிலைமையில் கட்சியின் கொள்கையை நிர்ணயிப்பது.

4.இரகசிய வாக்கெடுப்பின் ஊடாக மத்திய கமிட்டியை தேர்ந்தெடுப்பது.

5.அவசியமேற்படின் ஒரு தகுதி ஆய்வுக் குழுவைத் தேர்ந்தெடுத்து அவற்றினுாடாக உறுப்பினர்கள் அனைவருடைய தகுதிகள் குறித்து ஆய்வு செய்து அதற்கேற்ப நடவடிக்கைகள் எடுக்கலாம். ஆய்வு நடத்திய பின் உடனடியாக அக்குழுவை கலைத்திடல் வேண்டும்.

6. பொதுக்குழுவின் அமைப்புக்களை நடத்திக் கொடுப்பதற்கு ஒரு தலைமைக் குழுவை பொதுக்குழு தேர்ந்தெடுத்துக் கொள்ளும்.

பிரிவு 14 மத்திய கமிட்டி

1) 1.மத்திய கமிட்டியானது பொதுக்குழுவினால் தேர்ந்தெடுக்கப்படும் மத்திய கமிட்டி உறுப்பினர்கள் எண்ணிக்கையையும் பதவிக் காலத்தில் மத்திய கமிட்டி நிர்ணயிக்கும்.

2.பதவிக் காலம் முடிந்து செல்லும் மத்திய கமிட்டி புதிய மத்திய கமிட்டியான வேட்பாளர்களின் பட்டியலை பிரேரிக்கும்.

3.பிரேரிக்கப்பட்ட பட்டியலிலுள்ள எந்த ஒரு பெயரையும் குறித்து எந்தவொரு உறுப்பினரும் ஆட்சேபனை எழுப்பலாம் அல்லது புதுப் பெயரையும் பிரேரிக்கலாம். ஆனால் அவ்வாறு பிரேரிக்கப்பட்ட உறுப்பினரின் சம்மதம் முன்கூட்டியே பெறப்பட்டிருத்தல் வேண்டும்.

4.பிரேரிக்கப்பட்ட எந்த ஒரு வேட்பாளருக்கும் தன் பெயரை வாபஸ் பெற்றுக் கொள்ளும் உரிமை உண்டு.

5.மத்திய கமிட்டியினால் முன்வைக்கபட்ட வேட்பாளர் பட்டியலிலும் அத்துடன் பிரதிநிதிகளால் முன்வைக்கப்பட்ட வேட்பாளர் பட்டியலிலும் சேர்த்து இரகசிய வாக்கெடுப்பின் ஊடாக ஒற்றை வாக்குமுறையில் வாக்கெடுப்பிற்கு விடப்பட்டு தேர்வு நடைபெறும்.

www.tamilarangam.net

2) பொதுக்குழு கூட்டப்பட்டு அடுத்தடுத்து பொதுக்குழு கூடும் வரை இடையிலுள்ள காலங்களில்
மத்திய கமிட்டியே மிகவும் உயர்ந்த அதிகாரம் படைத்த அமைப்பாகும்.

3) பொதுக்குழு எடுத்துள்ள முடிவுகளை நிறைவேற்றுவதற்கும் கட்சியின் அமைப்புச் சட்டத்தை அமுல்படுத்துவதற்கும் மத்திய கமிட்டியே பொறுப்பாகும்.

4) கட்சியின் முன்னால் வரும் எந்தவொரு பிரச்சனை குறித்தும் முழு அதிகாரத்துடன் முடிவுகள் எடுக்கும் உரிமை மத்திய கமிட்டிக்கு உண்டு.

5) மத்திய கமிட்டி உறுப்பினர்களிலிருந்து ஒரு செயற்குழுவை மத்திய கமிட்டி தெரிந்தெடுக்கும். செயற்குழுவில் எத்தனை உறுப்பினர்கள் இருக்கவேண்டும் என்பதை மத்திய கமிட்டி தீர்மானிக்கும். மத்திய கமிட்டியின் இரண்டு கூட்டத் தொடர் காலங்களுக்கு இடைப்பட்ட வேலையை செயற்குழு நடாத்திச் செல்லும். மத்திய கமிட்டியின் இரண்டு கூட்டங்களுக்கிடையில் அரசியல் மற்றும் ஸ்தாபன முடிவுகளை மேற்கொள்ள செயற்குழுவிற்கு அதிகாரம் உண்டு.

6) அவசியமேற்படின் தன் வசதிக்காக செயற்குழு மத்திய கமிட்டியினுள் இராணுவ பொருளாதார பிரச்சாரப் பிரிவுகளை ஏற்படுத்தலாம். இப்பிரிவுகளை ஏற்படுத்தவும், கலைக்கவும், மாற்றவும் செயற்குழவிற்கு அதிகாரமுண்டு.

7) 1.கட்டுப்பாட்டை மீறுதல், கெட்ட நடத்தை, கட்சி விரோத நடவடிக்கை ஆகியவற்றிற்காக மத்திய கமிட்டியில் எந்தவொரு உறுப்பினரையும் மத்திய கமிட்டிக்கு கூட்டத்தில் வருகை தந்து வாக்களிக்கும் மூன்றில் இரண்டு பங்கு உறுப்பினர்களால் மத்திய கமிட்டியிலிருந்து நீக்க வேண்டும். ஆயினும் அத்தகைய தேர்வுகளில் மத்தயி கமிட்டியின் உறுப்பினர்களின் எண்ணிக்கையில் பாதிக்கு மேலான உறுப்பினர் தவறு செய்யும் உறுப்பினரை நீக்குவதற்கு வாக்களித்திருக்க வேண்டும்.

2.மத்திய குழுவில் ஏற்படும் எந்த ஒரு காலி இடத்தையும் அதன் மொத்த உறுப்பினர்களின் சாதாரண பெரும்பான்மை முடிவின் படி பூர்த்தி செய்துகொள்ள முடியும்.

3.மத்திய கமிட்டியின் ஒரு உறுப்பினரோ அல்லது பல உறுப்பினர்களோ கைது செய்யப்படும் பட்சத்தில் மிதமிருக்கும் மத்திய கமிட்டி உறுப்பினர்கள் தற்காலிக உறுப்பினர்களை இணைத்துக் கொள்ள முடியும். தற்காலிக உறுப்பினர்களுக்கு முன்னைய உறுப்பினர்களின் சகல உரிமைகளுமுண்டு. ஆனால் கைது செய்யப்பட்ட உறுப்பினர் விடுதலையாகி வந்ததும் சகல பொறுப்புகளையும் திருப்பி ஒப்படைக்க வேண்டும்.

www.tamilarangam.net

8) மத்திய கமிட்டியின் இரண்டு கூட்டங்களுக்னிடையிலுள்ள காலம் 6 மாதங்களுக்கு மேல் போகக்கூடாது. அத்துடன் அதனுடைய மொத்த உறுப்பினர்களின் மூன்றில் ஒரு பங்கினர் கோரும்போது எல்லாம் கூட்டப்படல் வேண்டும்.

9) கட்சியின் நிதிகளுக்கு மத்திய கமிட்டி பொறுப்பாகும். செயற்குழுவினால் சமர்ப்பிக்கப்படும் வரவு செலவுக் கணக்குகளை மத்திய கமிட்டி பரிசீலித்து அங்கீகரிக்கும். அத்துடன் பொதுக்குழுவிற்கும் சமர்ப்பிக்க வேண்டும்.

10) எப்பொழுதெல்லாம் பொதுக்குழு கூட்டப்படுகின்றதோ அப்பொழுதெல்லாம் தன் அரசியல் ஸ்தாபன அறிக்கையை மத்திய கமிட்டி சமர்ப்பிக்கும்.

## பிரிவு 15 பொதுச் செயலாளர்

செயற்குழுவானது வாக்கெடுப்பின் மூலம் செயலாளரைத் தெரிவு செய்யும். மத்திய கமிட்டி கூட்டத் தொடர்களுக்கு பொதுச் செயலாளர் தலைமை வகிப்பார். செயற்குழுவின் அறிக்கையை மத்திய கமிட்டியின் முடிவுகளை அதன் கூட்டத் தொடர்களுக்கு இடைப்பட்ட காலத்தில் நிறைவேற்றும் பொறுப்பை உடையவர்.

## பிரிவு 16 மாவட்ட அமைப்புக்கள்

வளர்ந்த காலகட்டத்தில் தேவை ஏற்படும் பட்சத்தில் நிர்வாக பரவலாக்கத்தின் பொருட்டு பொதுக்குழுவின் அங்கீகாரத்தோடு மத்திய கமிட்டியாவது மாவட்டங்கள் தோறும் மாவட்ட அமைப்புக்களை ஏற்படுத்தும். இவற்றில் அம்மாவட்டத்தைச் சேர்ந்த பொதுக்குழு உறுப்பினர்கள் அங்கம் வகிப்பர். இதன் தலைமையை அவர்களே தெரிவு செய்வர். தலைமை எடுக்கும் எந்த முடிவும் மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மையும் இயக்கத்தின் கொள்கைக்கும் அமைப்புச் சட்டத்திற்கும் முரணபடாமல் இருத்தல் வேண்டும். அத்துடன் கட்சியின் தலைமை குழுவின் அங்கீகாரத்தையும் பெறவேண்டும். இம்மாவட்ட அமைப்புக்களை தேவை ஏற்படும் பட்சத்தில் கூட்டவோ அல்லது கலைக்கவோ மத்திய குழுவிற்கு அதிகாரம் உண்டு. இவ்வமைப்பு தனக்கென புறம்பாக ஒரு கணக்கு வைத்திருக்கலாம். தமக்கென சில உப விதிகளை மத்திய கமிட்டியின் அங்கீகாரத்துடன் ஏற்படுத்தலாம்.

## பிரிவு 17 கட்சிக் கட்டுப்பாடு

1.பொது வாழ்விலோ அல்லது கட்சியிலுள்ளோ உறுப்பினருக்கு இருக்கும் அந்தஸ்து ஏதுவாக இருந்தாலும் கட்சியின் சகல உறுப்பினர்களும் கட்சியின் கட்டுப்பாட்டிற்கு சமமாக உட்பட்பவர்கள் ஆவார்கள்.

2.அமைப்புச் சட்டத்தை மீறுதல், முடிவுகளை மீறுதல், கட்சிக்கு துரோகம் செய்தல் மற்றும் துர்நடத்தை என்பன ஒழுங்கு நடவடிக்கைகளுக்கு உரியன.

3.ஒழுங்கு நடவடிக்கைளாவன

1. எச்சரித்தல்
2. பகிரங்கமாக எச்சரித்தல்
3. வகிக்கும் பதவியிலிருந்து நீக்குதல்
4. குறிப்பிட்ட காலத்திற்கு (ஒரு வருடத்திற்கு மேற்படாதவாறு) தற்காலிகமாக வெளியேற்றல்
5. நிரந்தரமாக வெளியேற்றல்
6. வேறு ஏதாவது விதத்தில் தண்டிப்பதாயின் அத்தண்டனை எப்படிப்பட்டதாக இருக்க வேண்டும் என்பதை தீர்மானிக்கும் உரிமை பொதுக்குழுவிற்கு மட்டுமே உண்டு.

4.ஒழுங்கு நடவடிக்கைக்கு உட்படுத்தப்படும் நபருக்கு அவர் மீதுள்ள குற்றச்சாட்டுக்கள் முழுமையாகத் தெரியப்படுத்தல் வேண்டும். அத்துடன் அவை தொடர்பாக தன் விளக்கத்தை சமர்ப்பிக்க அவருக்கு உரிமை உண்டு.

5.கீழ்ப்பிரிவுகள் எடுக்கும் ஒழுங்கு நடவடிக்கைகள் மத்திய கமிட்டியின் அதிகாரம் பெறவேண்டும்.

6.கோஷ்டிப் பூசல்கள் எந்த மட்டத்தில் எந்த வடிவத்தில் வந்தாலும் அனுமதிக்கக் கூடாது.

பிரிவு 18 உட்கட்சி விவாதங்கள்

1.அவசியம் என்று மத்திய கமிட்டி கருதுகின்ற போதெல்லாம் நடைபெறும்.

2.விவாதத்திற்கான விடயம், விவாதம் நடத்தப்பட வேண்டிய வழிமுறைகள் என்பவற்றை 2 மாத காலத்திற்கு முன்பே சகல பிரிவுகளுக்கும் அனுப்பி வைக்க வேண்டும்.

பிரிவு 19

கட்சியின் அமைப்புச் சட்டத்தின் கீழ் அதற்கு பொருந்துகின்ற வகையில் விதிகளையும், உப விதிகளையும் ஏற்படுத்த மத்திய

www.tamilarangam.net

கமிட்டிக்கு அதிகாரம் உண்டு. மத்திய கமிட்டியின் அங்கீகாரம் பெற்ற மாவட்ட அமைப்புக்களும் தேவையான உபவிதிகளை ஏற்படுத்தலாம்.

பிரிவு 20 திருத்தம்

கட்சியின் அமைப்புச் சட்டம் பொதுக் குழுவினால் மட்டுமே திருத்தப்பட முடியும். பொதுக்குழு கூடுவதற்கு 2 மாதங்களுக்கு முன்பு அமைப்புச் சட்டம் திருத்தம் பற்றிய பிரேரனை அறிக்கைகள் பொதுக்குழு அங்கத்தினர்களுக்கு கொடுக்கப்படல் வேண்டும்.

**இன ஒடுக்கு முறையை எதிர்த்து**

**நிலப்பிரபுத்துவ தரகு முதலாளியத்தை எதிர்த்து**

**ஏகாதிபத்திய ஊடுருவலை எதிர்த்து**

**புதிய ஜனநாயகப் புரட்சியை மேற்கொள்வோம்.**